# ஆசிரியர் துணையோடு வாசித்தல்

## நோக்கங்கள்

1. மாணவர்களின் கேட்டல், பேசுதல் திறன்களை வளர்த்தல்
2. மாணவர்களுக்கு வாய்விட்டு வாசிக்க ஊக்கமளித்தல்
3. மாணவர்கள் சொற்களைச் சரியாக ஒலிக்கக் கற்பித்தல்
4. மாணவர்கள் தங்கள் சொல்வளத்தைப் பெருக்கிக்கொள்ள வழிவகுத்தல்










## புரிந்துணர்வும் மகிழ்வுணர்வும்



### 1) ஆயத்த நடவடிக்கை

- ஆசிரியர் கருப்பொருளுக்குத் தொடர்புடைய பாடலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களுடன் இணைந்து உற்சாகமாகவும் அசைவுகளுடனும் பாட வேண்டும்.

அல்லது

- மாணவர்கள் ஏற்கெனவே படித்த பெரிய புத்தகங்களுள் அவர்களுக்குப் பிடித்த ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதன் கதையை மீண்டும் வாசிக்க வேண்டும்.

**2) புதிய புத்தகத்தை அறிமுகம் செய்தல்**




- ஆசிரியர் புத்தகத்தின் முன்னட்டையிலுள்ள படத்தை மாணவர்களின் முன்னறிவுடன் தொடர்புபடுத்தி அவர்களுடன் கலந்துரையாட வேண்டும்.
- ஆசிரியர் கதையின் தலைப்பு, எழுதியவரின் பெயர், ஓவியரின் பெயர் ஆகியவற்றை வாசிக்க வேண்டும்.
- ஆசிரியர் கதையின் தலைப்பையும் முன்னட்டையிலுள்ள படத்தையும் தொடர்புபடுத்திக் கேள்விகள் கேட்பதன்வழிக் கதையை ஊகிக்க மாணவர்களுக்கு உதவ வேண்டும்.

**3) முதல் வாசிப்பு**



- ஆசிரியர் முதல் பக்கத்திலுள்ள படத்தைக் காட்டிக் கேள்விகள் கேட்டுக் கலந்துரையாட வேண்டும்.
- பிறகு, அவர் அந்தப் பக்கத்திலுள்ள தொடர்களை உரக்க வாசிக்க வேண்டும்.
- ஆசிரியர் வாசிக்கும்போது, ஒவ்வொரு சொல்லையும் தனித்தனியாகச் சுட்டிக்காட்டாமல் தொடர்ச்சியாக வாசிக்க வேண்டும்.
- ஆசிரியர் அடுத்த பக்கத்திற்குச் செல்வதற்குமுன் கேள்விகள் கேட்டுக் கதையின் அடுத்த நிலையை மாணவர்கள் ஊகிக்க உதவ வேண்டும்.
- மேற்கண்டவாறே ஒவ்வொரு பக்கத்திற்கும் தொடர்ந்து செய்ய வேண்டும்.




4) <u>**இரண்டாம் வாசிப்பு**</u>

- ஆசிரியர் பெரிய புத்தகத்தின் முழுக் கதையை எவ்விதக் குறுக்கீடும் இன்றித் தொடர்ச்சியாக வாசித்து முடிக்க வேண்டும்.
- ஆசிரியருடன் இணைந்து வாசிக்க மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.
- ஆசிரியர் கதையை வாசித்து முடித்தபின் கதையைப்பற்றிப் பேச மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும் அல்லது கதையில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளுடன் தங்கள் வாழ்க்கை அனுபவங்களைத் தொடர்புபடுத்திப் பேச ஊக்குவிக்க வேண்டும்.